Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-12 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-12 |
|---|---|

வேணு : 15 ஜனவரி 2010 கானம் : 6

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை





ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 15 | ஜனவரி 2010 | கானம் : 6

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
E-mail : contact@namadwaar.org




GOD India Trust சார்பாக மாணவர்களுக்கான கூட்டுப்ப்ரார்த்தனை பெங்களூர் டவுன் ஹால் – டிசம்பர் 19. ஸ்ரீகுருமூர்த்தி, ஸ்ரீபாக்யநாதன்



நவம்பர்17 முதல் சென்னை ப்ரேமிக பவனத்தில் க்ருத்திகா மண்டல வேத பாராயணம்



பெங்களூர் ராமமூர்த்தி நகர் சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் அனுமத் ஜெயந்தி கோலாகலம்.
நவம்பர் 29,30 (உள்படம் – புறப்பாட்டில் உற்சவர்)



அம்பத்தூர் ஸ்ரீமத்பாகவத சப்தாஹ துவக்க விழா டிசம்பர் 15



ஸ்ரீஸ்வாமிஜி உபன்யாசத்தின்பொழுது , குடியாத்தம் ஆஸ்திக சமாஜம் – நவம்பர் 26,27



நவம்பர் 28 முதல் டிசம்பர் 12 வரை சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீகுருப்ரேமாம்ருதம் – ஸ்ரீபாக்யநாதன் உரை



தெய்வத்தமிழ் இசை விழா துவக்கம் – டிசம்பர் 22 – மஹோதயா ஹால், சென்னை. இடமிருந்து வலம்– 'இசைப்பேரறிஞர்' 'சங்கீத கலாசாரதி' தெய்வீக ஸ்ரீசந்தான கோபாலன், திருவண்ணாமலை பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நிர்வாக நீதிபதி ஸ்ரீ T.S.அருணாசலம், ஸ்ரீபாக்யநாதன்



ஸ்ரீராமானுஜமிஷன் சியாட்டில் அமெரிக்காவில் குழந்தைகளுடன் பாலகுருகுலம் –
**"Krishna Provides"**—
Sri Premika Varadhan Puppet Show
Dec 5, 2009

ஸ்ரீராமானுஜமிஷன் வாஷிங்டன் ஷீரடி பாபா மந்திர் அமெரிக்காவில் டிசம்பர் 26–29
Ancient Wisdom for Modern Times உபன்யாசம்





கேரள திருப்ரையாறு ராமாயண நவாஹம் பாராயணத்தின்பொழுது – டிசம்பர் 17 – 25

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

**வேணு:15 ஜனவரி 2010 கானம்:6**


உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனம் | 02 | பாகவத பழம் -18 | 12 |
| மதுரமான மஹனீயர் - 166 | 04 | பாலகர்களுக்கு ஒரு கதை | 26 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | ப்ருந்தாவன நந்தகுமாரன் | 29 |
| ஸ்ரீகுரு ப்ரேம அம்ருதம் | 08 | மாலே மணிவண்ணா - 80 | 32 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: | பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: | ஸ்த்திரை ரங்கைஸ்துஷ்டுவாகும்ஸஸ்தனூபி: | வ்யசேம தேவஹிதம் யதாயு: | ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: | ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: | ஸ்வஸ்திநஸ் தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: | ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது | ஓம் சாந்தி சாந்தி சாந்தி: |

தேவர்களே, காதுகளால் நல்லதை நாங்கள் கேட்போமாக! உங்களை பூஜிக்கும் நாங்கள் கண்களால் நல்லதை காண்போமாக! திடமான உறுப்புகளுடன் கூடிய உடல்களால் உங்களை போற்றும் நாங்கள், தேவர்களுக்குவப்பான ஆயுள் எவ்வளவோ, அதை அடைவோமாக! பெரும்புகழ் வாய்ந்த இந்திரன் நமக்கு நன்மை அளிக்கட்டும்! எல்லாவற்றையும் அறியும் சூரியன் நமக்கு நன்மை அளிக்கட்டும்! தடைபடாத கதியுடைய கருடன், நமக்கு நன்மை அளிக்கட்டும்! தேவகுருவான ப்ருஹஸ்பதி நமக்கு நன்மை அளிக்கட்டும்! எல்லாவிதமான தீர்த்தங்களையும் அந்தந்த இடங்களிலிருந்து, இங்கு பூவுலகிலும், அங்கு மேலுலகிலும் குறைவின்றி அடைவோமாக!

– ஸ்ரீக்ருஷ்ண யஜுர் வேதம் – ஆரண்யகம் – சாந்தி பாடம்

# ஸ்ரீஸ்வாமிஜியை பற்றிய கீர்த்தனம்

நீதியரசர் ஸ்ரீ T.S.அருணாசலம்
Life Trustee Bhagawan Yogi Ramsuratkumar Trust - Thiruvannamalai



## உள்ளம் உதிர்த்த மலர்கள்



முதன் முதலில் கண்டேன் யோகிஜியின் பச்சை பாகையை
பின் கண்டேன் கண்டேன் அனைத்து ஆலயங்களிலும் அதே
பாகையை
இறைவனும் குருவும் ஒன்றே என்று உணர்த்தியதோ அப்பாகை
குருமஹராஜிடம் தெரிவிக்கவே பொங்கியதோ பேருவகை

பச்சைக்கொடி கண்டால் இரயில்கள் கிளம்பிடுமே
பச்சைப்பாகைதனை கண்டால் இன்பம் துள்ளிடுமே
பச்சைக்கு ஏனிந்த சிறப்பு என சிந்தித்தேன்
ப்டரும் பசுமை உள்ள தூய்மையே என உணர்ந்தேன்

என் முரளீதரனை அவ்வாறே சித்தரித்து கொண்டேன்
அவரிடம் என் பேரவாவை தெரிவித்து கொண்டேன்
"இன்று போய் நாளை வா" போலவே பின்பு என்றார்
அந்நாளுக்கு ஆவலாய் காத்திருந்தேன் நான் என்றறிவார்

கண்டேன் அக்காட்சியை டிசம்பர் திங்கள் மதுரமுரளியில்
கண்டேன் மனம் குளிர பச்சை பாகையில் என் முரளியை
யோகியாரே என் ஆவலை அறிந்து நாள் குறிப்பிட்டாரோ
ஆமோதித்து அதையே அன்னோன்ய ஆஞ்சநேயரை கூற
வைக்கின்றாரோ

எப்போதும் என் குருநாதர் என்னை அருளாமல் இல்லை
இப்போதும் என் முரளி என் அவாவை நிறைவேற்றாமல் இல்லை
ஆன்மீக விளையாட்டு என்பதும் இப்படித்தானோ
இருவரையும் இணைத்து மதிப்பதும் அப்படித்தானோ

வாழிய வாழிய குரு பரம்பரை!

ஸ்ரீஹரி:

## மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீமுரளீதரஸ்வாமிஜியின்
## ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் (தமிழில்)

## GOD இந்தியா ட்ரஸ்டு உங்களை அன்புடன் வரவேற்கிறது

இடம்: நாரத கான சபா
டி.டி.கே. ரோடு,
ஆழ்வார்பேட்டை

தேதி : ஜனவரி 12 முதல் 18 வரை
தினமும் மாலை 6.30 முதல் இரவு 8.30 வரை

| | |
|---|---|
| 12.1.2010 | பாகவத மாஹாத்மியம் |
| 13.1.2010 | ஸ்ரீமத் பாகவத அவதாரம் |
| 14.1.2010 | துருவ சரித்திரம் |
| 15.1.2010 | அஜாமிள சரித்திரம் |
| 16.1.2010 | ப்ரஹ்லாத சரித்திரம் |
| 17.1.2010 | க்ருஷ்ண ஜனனம் & லீலை |
| 18.1.2010 | ருக்மிணி கல்யாணம் |

# மதுரமான மஹநீயர் - 166

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

பண்டரீபுரம், ப்ருந்தாவனம், காசி, ராமேஸ்வரம், பூரி என்று புனித யாத்திரை செல்கின்றோம். சிலர் விடுமுறை நாட்களில் எங்காவது உல்லாசமாக இருக்க செல்வார்கள். அப்படி செல்வது போல் நாம்



முடிந்த பொழுதெல்லாம் அடிக்கடி, பெற்றோர்கள் இல்லாத குழந்தைகள் வசிக்கும் இடங்களுக்கும், PHYSICALLY CHALLENGED PEOPLE வசிக்கும் இடங்களுக்கும், முதியோர்கள் வசிக்கும் இடங்களுக்கும் சென்று வர வேண்டும்.

இதுவும் ஒரு புனித யாத்திரைதான். அவர்கள் அனைவரையும், இறைவனுடைய வடிவங்களாக பார்த்து, நம்மால் முடிந்த உதவிகளை செய்து வர வேண்டும். அந்த ஆஸ்ரம நிர்வாகிகளின் அனுமதி பெற்று, அடிக்கடி அங்கு சென்று நாமசங்கீர்த்தனம் செய்து வர வேண்டும். அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனையும் செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட இடங்களுக்கு அடிக்கடி சென்று வருவோமானால், நம்மை அறியாமலே நம்மிடம் நல்ல மாற்றங்கள் ஏற்படும். வாழ்வின் நிலையாமை, முதுமை, மனித பிறவியின்



அருமை, பொருளின் அருமை, நேரத்தின் அருமை எல்லாம் தெரிய வரும். ஆகவே வாழ்க்கையின் அருமையை உணர்ந்து வாழ இது உதவும். அடுத்தவர்களின் துக்கங்களில் பங்கு கொண்டு அவற்றிற்காக



பிரார்த்தனை செய்யும்பொழுது மனது மேலும் விசாலமாக ஆகும். அண்மையில் ஸ்ரீஸ்வாமிஜி ஸ்ரீபெரும்புதூரில் உள்ள கிருபா சேவை மையத்திற்கு சென்று இருந்தார். அங்கிருந்து


இதுவும் ஒரு புனித யாத்திரைதான். அவர்கள் அனைவரையும் இறைவனுடைய வடிவங்களாக பார்த்து நம்மால் முடிந்த உதவிகளை செய்து வர வேண்டும். அந்த ஆஸ்ரம நிர்வாகிகளின் அனுமதி பெற்று அடிக்கடி அங்கு சென்று நாமசங்கீர்த்தனம் செய்து வர வேண்டும். அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனையும் செய்ய வேண்டும்.

கிளம்புகையில், அங்குள்ள special childrenகளுக்காக அங்கு சேவைபுரிவோரின் மனப்பான்மை கண்டு மிகவும் நெகிழ்ந்து போனார். அதுசமயம், என்னிடம் ஸ்ரீஸ்வாமிஜி மேற்கண்ட எண்ணங்களை பகிர்ந்து கொண்டார். இது உலகுக்கும், ஒரு நல்லுபதேசமாக அமைகின்றதினால், உங்களுடன் இங்கு பகிர்ந்து கொண்டேன்.

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்



***கேள்வி: ஒருவர் "தான் எப்பொழுதும் அழியாத ஆத்மா" என்ற சிந்தனையுடன் வாழ முடியுமா?***

பதில்: உலகில் ஒரு பெரிய அறிவாளி இருக்கின்றார். அவருடைய அறிவு திறமைக்காக, அவர் எல்லோராலும் பாராட்டப்படுகின்றார். அவருக்கு எப்பொழுதும் தன்னுடைய அறிவை பற்றிய ஒரு பெருமை உணர்வு, எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கும். அதுபோல் ஒருவர் மிக அழகாக இருக்கின்றார்; அவருடைய சரீர அழகை பற்றிய பெருமை எண்ணம், அவருடைய அடிமனதில் இருந்துகொண்டே இருக்கும். அதுபோல், கவிஞருக்கு தன்னுடைய மனதின் கற்பனை திறனை பற்றி பெருமை எண்ணம், அவருடைய அடிமனதில் இருந்துகொண்டே இருக்கும். ஆழ்கடலில் முத்து குளிக்கும் வீரன் ஒருவனுக்கு, தான் பிராணனை அடக்கும் திறமையை நினைத்து ஒரு பெருமை இருந்துகொண்டே இருக்கும். ஆகவேதான் அவரவர்கள் முறையே அறிவாளி, அழகன், கவிஞன், வாயுவை அடக்குபவன் என்று அறியப்படுகின்றனர். அதுபோல் விவேகியும் எப்பொழுதும், தான் சரீரம் இல்லை ஆத்மா என்ற சிந்தனையில் இருக்க முடியும்.



***கேள்வி: "ராம" என்று ஜபம் செய்து வந்தாலே ஜீவன் முக்தி சித்திக்குமா?***

பதில்: ராமரஹஸ்யோபநிஷத்தில் "ரா" என்பது "தத்" என்ற

வாக்யத்தையும் "ம" என்பது "த்வம்" என்ற வாக்யத்தையும் "ராம" என்று சேர்ந்தால் "தத்த்வமஸி" என்ற மஹாவாக்யத்தையும் குறிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

*ஆத்யோ ரா தத்பதார்த்தஸ்யாத் மகார: த்வம் பதார்த்தவான்*
*தயோ: ஸம்யோஜனம் அஸி இத்யர்த்தே தத்வவிதோவிது:*

*(ராமரஹஸ்யோபநிஷத் - 5-13,14)*

**கேள்வி: சாஸ்திரத்திற்கு அப்படி என்ன கௌரவம்?**

பதில்: ஒரு மாநிலத்தில், மது அருந்தினால் குற்றம். அதே மதுவை, அடுத்த மாநிலத்தில் அருந்தினால், அது குற்றம் ஆகாது. இது போல் பல விஷயங்களை சொல்லிக்கொண்டே போகலாம். சமூக சட்டதிட்டங்கள், காலத்தையும், அதை இயற்றும் நபர்களையும் பொறுத்து அமையும். ஆனால் சாஸ்திரம் என்ற சட்டமோ தெய்வத்தினுடைய விதிகள்!

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Zaah
TECHNOLOGIES

OUR SOLUTIONS

- SEARCH ENGINE OPTIMIZATION
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- WEB DEVELOPMENT

# ஸ்ரீகுருப்ரேமாம்ருதம் ப்ரேமிக பவனத்தில்

நவம்பர் மாதம் 28ம் தேதி முதல் டிசம்பர் மாதம் 12ம் தேதி வரை பதினேழு நாட்கள், சென்னை ப்ரேமிக பவனத்தில், ஸ்ரீபாக்யநாதன் அவர்களது சொற்பொழிவு அமைந்திருந்தது. ப்ரேமிக பவனத்தில் எண்ணற்ற சொற்பொழிவுகளும், கதாகாலேட்சபங்களும், நாமகீர்த்தனமும் நடந்துள்ளது என்பது உண்மைதான். ஸ்ரீஸ்வாமிஜியின் எண்ணற்ற அருளுரைகள் இங்கே நிகழ்ந்துள்ளன. இம்முறை நடந்த சொற்பொழிவில் ஸ்ரீபாக்யநாதன் ஆற்றிய உரையின் விசேஷம் என்னவெனில், அவர் பேசியது முழுக்க முழுக்க ஸ்ரீகுருநாதரின் திவ்ய சரித்திரம்தான். இது நடைபெற்ற அனைத்து தினங்களும் அன்பர்கள் காலம் தவறாமல் வந்திருந்து, சிரவணம் செய்து ஆனந்தித்தனர். ப்ரேமிக பவனமே நிரம்பி வழிந்தது. ஸ்ரீகுருநாதரின் திவ்யசரித்திரத்தை கேட்கையில், உற்சாகம் கரை புரண்டோடியதை, அன்பர்கள் மத்தியில் எளிதில் பார்க்க முடிந்தது.



ஸ்ரீகுருநாதரின் அவதாரம் கடலூரில் தொடங்கியதிலிருந்து கிரமமாய், ஒவ்வொரு காலகட்டத்தையும், அவர் வரிசைப்படுத்தி விவரித்து சொல்லி வந்தார். பால்யத்தில் ஸ்ரீகுருநாதர் செய்த பால லீலைகளை கேட்கையில் மனம் துள்ளியது. பலருக்கு ஸ்ரீகுருநாதர் அழுந்தொறும் அரவணைக்கும் அன்னைதான்; அவர் சொல்லை விட பலமுள்ள மந்திரமில்லை பலருக்கு - ஆதலின் தொழுவதற்கு ஒரு ஒப்பற்ற தந்தை. ஸ்ரீகுருநாதர் எப்படி இளமையிலிருந்தே ஸ்ரீனிவாச பெருமாளிடம் இயல்பான காதல் கொண்டிருந்தார் என்பதை கேட்கையில் அப்பரின் "கருவிற் பிறந்த நாள் முதல்" என்னும் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன. விளையாடுகையில்

சற்றும் சளைக்காத உற்ற தோழனான நம் ஸத்குருநாதர், அனுபவங்கள் ஏற்படுகையில், எப்படி அவற்றை, சோதனை செய்தே ஏற்றார் என்பது ஆச்சரியம்தான். பாரதம் முழுவதும், அவர் திக்விஜயம் தனியாகவே செய்திருக்கிறார் என்பது தெரியாத விஷயம் இல்லை எனினும், அன்பர்களுடன் பல தலங்களுக்கு செல்கையிலே, குறிப்பாக ஸ்ரீப்ருந்தாவனத்தில் ஒரு குழந்தையாகவே இருந்துள்ளார் என்பதற்கு சொன்ன பல உதாரணங்கள் தெவிட்டாதவை.

ஸ்ரீகுருநாதர், பல்வேறு காலத்தில் மேற்கொண்டிருந்த பல்வேறு ஞான, பக்தி பாவனைகளை எடுத்தியம்பியது பிறருக்கு அரிது. "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்" என வள்ளுவ பெருந்தகை கூறியது இங்கு மிக பொருந்தும். பல்வேறு காலங்களில் ஸ்ரீகுருநாதரிடமிருந்து பல கீர்த்தனைகள் வெளிப்பட்டதை விளக்கியது எல்லாம் புதுமை (கோலோகம் சென்று வந்தேன் - கண்ணன், காளமேகபெருமாள் - பாக்யம், தாக்ஷாயணி - அம்பாஜீ போன்ற பல).

"முக்தர் மனமிருப்பது மோனத்திலே" எனும் ஞானிகளுக்கே உரிய போக்கு, நம் ஸத்குருநாதரிடம் விளங்குவதை இயம்பியது அருமை . ஸ்ரீகுருநாதர் சொல்லின் செல்வராய், பல்வேறு தருணங்களில் ரத்தின சுருக்கமாய் விளக்கங்களை அதிகாரிக்கு தகுந்தபடி சொல்வது; மஹாத்மாக்களை மஹாத்மாக்களே அறிய முடியும் என்பதற்கு ஒப்ப சொன்ன சில சம்பவங்களை எல்லாம் என்னவென்று சொல்ல!. அவரின் அன்பு, எளிமை, தவம், சற்றும் தளராத மனப்பான்மை, விரோதிக்கும் கருணையை மனதால் வருஷிக்கும் பாங்கு, தம்மை அண்டிய ஜீவன்களுக்கு சத்கதியளிக்கும் கருணை, ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசம் எவ்வாறு ஒவ்வொருவரையும் சரியாக மாற்றுகிறது, ஸ்ரீகுருநாதரிடம் உள்ள என்றும் ரஸிக்கத்தக்க ஹாஸ்ய உணர்வு, தம்மிடம் வரும் அன்பர்களை அரவணைத்து வழிநடத்தி செல்லும் பாங்கு என பலவற்றை, ஒன்றன்பின் ஒன்றாய் வரிசைப்படுத்தி பேசியது என,

சொல்லிக்கொண்டே போகலாம். இப்படி ஸ்ரீபாக்யநாதன் ஆத்மகுணங்களை அதிகம் பேசியது, இதயத்தின் இதமான வருடல்தான். எதிர்காலத்தில் நடக்க இருக்கும் சம்பவங்களை எங்ஙனம் தம்மிடம் குருநாதர் சொல்லி இருந்தார் என அவர் கூறிய சில மலைக்க வைப்பவை. "கலயே சுந்தராகாரம்" எனும் ஸ்ரீஸ்வாமிஜி குறித்த சுலோகத்திற்கு அவர் சொன்ன பொருள் அழகு.

ஸ்ரீகுருநாதரின் நிர்வாகத்திறன் என்பது அளப்பரியது. ஒரு ஸ்தாபனத்தை நடத்துவதே பெரிய கடினமாய் இருக்க, எத்துனை ஸ்தாபனங்கள் அவற்றில் எத்துனை காரியங்கள்;. சற்றேறக்குறைய, சராசரி ஒரு வருட காலத்தில், ஸ்ரீகுருநாதரது வழிநடத்துதலின்படி, நடந்தேறும் அலுவல்களை அவர் குறிப்பிட்டபோது பிரமிக்காமலிருக்க முடியவில்லை. இவற்றில் வேதஸம்ரக்ஷணமும், திருக்கோவில் திருப்பணிகளும், மஹாமந்திர கீர்த்தனம் சம்பந்தமான பணிகளும் அளவு சொல்ல முடியாதவை என்பதை, ஸ்ரீபாக்யநாதன் சொல்லியதை கேட்டவருக்கு புரிந்திருக்கும்.

ஸ்ரீஸ்வாமிஜியுடன், பல்வேறு அன்பர்களும் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை அவர் பேசினார். பலரும் கேட்டிராத பல சம்பவங்கள், அன்பர்களை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தின. ஸ்ரீபாக்யநாதன், தமக்கு சேவை செய்யும் பாக்யம் கிட்டியதை குறிப்பிட்ட பொழுது "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி வைத்து விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் செப்பாய்" எனும் தாயுமானவர் வரிகள் தோன்றத்தான் செய்தது.



இறுதி நாளன்று, அடடா! இது முடிந்து விடப்போகிறதே என இருந்தது. அன்று, அன்பர்கள்

அனைவரும் ஸ்ரீகுருநாதரின் திருவுருவ படத்திற்கு மலராஞ்சலி செலுத்த வகை செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீபாக்யநாதனுக்கு ப்ரேமிகபவன் ஸ்ரீனிவாச பெருமாள், மலைப்பட்டு ப்ரேமிகவரதன் மற்றும் கல்யாணஸ்ரீனிவாச பெருமாள் ப்ரசாதம் வழங்கப்பட்டது. ஸ்ரீகண்ணன் தீக்ஷிதர், ஸ்ரீஜானகிராமன் மாமா மற்றும் ஸ்ரீஸ்ரீகாந்த் ஆகியோர் ஸ்ரீஸ்வாமிஜியின் திவ்ய சரித்திரத்தை வழங்கியமைக்கு ஸ்ரீபாக்யநாதனை மிகவும் பாராட்டினர். மேலும் ஸ்ரீஸ்ரீகாந்த் இதற்கு முன்னோடியாக, குமரன் அனுக்ருஹா கல்யாண மண்டபத்தில் நடந்த ஸ்ரீஸ்வாமிஜியின் ஜெயந்தியை துவங்கிய ஸ்ரீவைத்தீஸ்வரன், ஸ்ரீவினோத், ஸ்ரீமதி கல்பனாஸ்ரீனிவாசன் ஆகியோருக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்தார். ஸ்ரீதீனதயாளன் வந்திருந்த அன்பர்களுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ந்தார்.

*சத்குருபாதத்தை நாட்டமென்றிரு; மனதே! உனக்கு உபதேசமிது –பட்டினத்தார்*

சத்குருநாத மஹாராஜ் கீ ஜெய்!

**<u>சத்சங்க அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்</u>**

**ஸ்ரீஸ்வாமிஜியின் ஜயந்தியன்று பல பக்தர்கள் தங்களுக்கு ஸ்ரீஸ்வாமிஜியுடன் ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அப்படி பலருக்கு நடந்திருக்கும். தங்களுக்கு ஸ்ரீஸ்வாமிஜியுடன் ஏற்பட்ட அனுபவங்களை விருப்பமிருப்பின், நம்பர் 51, 7வது அவென்யூ, அசோக் நகர், சென்னை – 83 என்ற நமது அலுவலக முகவரிக்கு தபால் மூலம் விரிவாக எழுதி அனுப்பலாம் . தொலைபேசி எண்: +9144-24895875 அங்ஙனம் எழுதி அனுப்புகையில் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி ஆகியவற்றை தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

# பாகவத பழம்

18

– ஸ்ரீஸ்வாமிஜி

"கயாச்ராத்தம் நூற்றுக்கணக்கில் செய்தால்கூட, நான் நல்ல கதி அடையமாட்டேன். வேறு ஏதாவது உபாயம் இருக்கிறதா என்று சீக்கிரம் ஆலோசித்து அதன்படி செய்து என்னை இந்த அவஸ்தையிலிருந்த விடுவித்து விடு" என்று கெஞ்ச ஆரம்பித்தான், அந்தப் பூத உருவத்திலிருந்து துந்துகாரி.

பறவைகளுக்கு, சம்ஸ்காரம் கிடையாது. ஆனால் ராமனோ ஜடாயு என்ற பறவைக்கு அந்திம சம்ஸ்காரம் செய்தான். "இது எப்படிப் பலன் தரும்?" என்ற கேள்வி எழும். ஆனால், அப்படிச் செய்தவர், விசேஷ மகிமை உடையவராக இருந்ததால், அவருடைய மகிமை விசேஷத்தால் பலன் கிடைத்தது. அப்படிப் பார்த்தால் கோகர்ணனோ மஹா தபஸ்வி, பவித்ரமானவன். கயாவோ உயர்ந்த க்ஷேத்திரம். எந்த கயா க்ஷேத்திரத்தில், காலத்தில் முறைப்படி சம்ஸ்காரம் செய்யப்பட்டவர்கத்வய பித்ருக்களுக்கும், தூர தேசம் சென்று எங்கேயாவது மரணம் அடைந்தவர்களுக்கும், தெரியாமலேயே சம்ஸ்காரமே செய்யப்படாது போனவர்களுக்கும், தூக்கு மாட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொண்டவர்களுக்கும்,

**நன்கு சாஸ்திரம் படித்தவர்களாக இருந்த அந்தணர்களிடம் சென்று நடந்தவற்றைக் கூறினான். அவர்களிடம் "என்ன செய்யலாம்?" என்று விசாரித்தான். அவர்களோ, "கயாச்ராத்தம்தான் மரித்த ஒரு ஜீவனுக்குச் செய்யக்கூடிய பெரிய பித்ருகர்மம். அதைச் செய்துவிட்டாய். அவ்வளவுதான். அதற்குமேல் சாஸ்திரம் எதுவும் சொல்லவில்லை" என்று கூறிவிட்டார்கள்.**

தண்ணீரிலோ, நெருப்பிலோ, மலையிலோ, காட்டிலோ, புலி, சிங்கம், முதலிய துஷ்ட மிருகங்களாலோ, கொலைகாரர்களோ, துர்மரணம் அடைந்தவர்களுக்கும், உபநயனம் ஆகிய பிரும்மச்சாரிகளுக்கும், விவாஹம் ஆகாமலேயே இறந்துபோன கன்னிகைகளுக்கும், மழலை பேசி, இறந்துவிட்ட குழந்தைகளுக்கும், கர்ப்பத்திலேயே கலைந்துபோன சிசுவிற்கும், பாவிகளுக்கும், பிரஷ்டர்களாய் போனவர்களுக்கும், ஊனம், முடம், குருடு, பித்து முதலிய மக்களுக்கும், அசத்துக்களுக்கும், புத்திரன் உள்ளவர்களுக்கும், புத்திரன் இல்லாதவர்களுக்கும், ஆசார்யன், மாதுலன் முதலிய காருணி பித்ருக்களுக்கும், கர்மாவில் தகுதி இல்லாதவர்களுக்கும், மாப்பிள்ளை, அபலையான பெண், நாத்தனார், மைத்துனன், நண்பன், சம்பந்தி, வேலைக்காரன் இவர்களுக்கும், விதவைகளுக்கும், வாழ்க்கையில் வழிதவறி போனவர்களுக்கும், புண்ணியசாலிகளாகவோ, பாபிகளாகவோ இருக்கும் எல்லா பித்ருக்களுக்கும், கயாக்ஷேத்திரத்தில் உள்ள அக்ஷயவடத்தின் அடியில் உள்ள விஷ்ணுபாதமே கதி என்று சொல்லப்படுகிறதோ. அப்படிப்பட்ட க்ஷேத்திரத்தில், கோகர்ணன் துந்துகாரிக்காகப் பிண்டம் போட்டும், இவன் கரையேறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

கோகர்ணன், "தவிக்கும் இந்த ஜீவனுக்கு என்ன செய்யலாம்" என்று சிந்திக்கலானான். இதுதான்

**புண்ணியசாலிகளாகவோ, பாபிகளாகவோ இருக்கும் எல்லா பித்ருக்களுக்கும் கயாக்ஷேத்திரத்தில் உள்ள அக்ஷயவடத்தின் அடியில் உள்ள விஷ்ணுபாதமே கதி என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட க்ஷேத்திரத்தில் கோகர்ணன் துந்துகாரிக்காகப் பிண்டம் போட்டும், இவன் கரையேறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.**

மஹான்களுடைய இயல்பு, "யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன?" என்று இருக்க மாட்டார்கள். மேலே போய் விழுந்து நல்லது செய்வார்களாம்.

மஹான்களுடைய இயல்பு, "யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன?" என்று இருக்க மாட்டார்கள். மேலே போய் விழுந்து நல்லது செய்வார்களாம்.

நன்கு சாஸ்திரம் படித்தவர்களாக இருந்த அந்தணர்களிடம் சென்று நடந்தவற்றைக் கூறினான். அவர்களிடம் "என்ன செய்யலாம்?" என்று விசாரித்தான். அவர்களோ, "கயா ச்ரார்த்தம்தான் மரித்த ஒரு ஜீவனுக்குச் செய்யக்கூடிய பெரிய பித்ருகர்மம். அதைச் செய்துவிட்டாய். அவ்வளவுதான். அதற்குமேல் சாஸ்திரம் எதுவும் சொல்லவில்லை" என்று கூறிவிட்டார்கள்.

வேறு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே வருகையில், பெரியவர்கள் எல்லோரும், சூரியனின் வாக்கையே இதில் சாட்சியாக ஏற்க வேண்டும் என்றார்கள். வெளியில் வந்த கோகர்ணன் விளையாட்டாகச் சூரியனுடைய கதியை நிறுத்திவிட்டானாம்! ஏதோ எழுதிவிட்டோம். அது எவ்வளவு பெரிய விஷயம்! சூரியனை நிறுத்தி அவரிடம் ஆலோசனை கேட்டான்.

கோகர்ணன் விளையாட்டாகச் சூரியனுடைய கதியை நிறுத்திவிட்டானாம்! ஏதோ எழுதிவிட்டோம். அது எவ்வளவு பெரிய விஷயம்! சூரியனை நிறுத்தி அவரிடம் ஆலோசனை கேட்டான். உடனே சூரியன், "அவனை பாகவத ஸப்தாஹம் கேட்கச் சொல், அப்படிக் கேட்டால் முக்தியே கிடைக்கும்" என்றாராம்.

உடனே சூரியன், "*ஸ்ரீமத்பாகவதான் முக்தி: ஸப்தாஹம் வாசனம் குரு! (மா: 5-41)*" "அவனை ஏழு நாட்கள் பாகவதம் கேட்கச் சொல்" என்று கூறினார். அதாவது, "பாகவத ஸப்தாஹம் கேட்கச் சொல், அப்படிக் கேட்டால் முக்தியே கிடைக்கும்" என்றாராம்.



இதைக்கேட்ட கோகர்ணன், காரியத்தில் இறங்கினான். ஒரு பெரிய பந்தல் போட்டு மேடை அமைத்தான். மங்களமாகவும், பவித்திரமாகவும், சுத்தமாகவும் ஒரு ஸப்தாஹம் நடத்த ஏற்பாடாகியது. ஏழு கணுக்களுடைய ஒரு மூங்கில் நடப்பட்டு, அதில் துந்துகாரியினுடைய பூதசரீரம் மந்திரத்தால் ஆவாஹனம் செய்யப்பட்டது. ஒவ்வொரு நாள், ஸப்தாஹத்தில் முடியமுடிய, முதல் கணு, இரண்டாவது கணு, மூன்றாவது கணு என்று வெடித்ததாம். ஏழாவது நாள் முடிவில் ஏழு கணுக்களும் வெடித்தன என்று சொல்லாமல், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணுவாக வெடித்தது என்று சொல்லுவானேன்? என்றால், அதில் ஒரு தத்துவம் உள்ளது. அது என்ன என்றால், ஸ்ரீமத் பாகவதத்தை ஒரு நாள் கேட்டாலும்கூட அதற்குப் பலன் உண்டு என்பதே அது.

**ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம், கடைசி சுலோகத்துடன் முடிந்ததோ இல்லையோ, வைகுண்டத்திலிருந்து ஒரு விமானம் வந்தது.**

ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம், கடைசி சுலோகத்துடன் முடிந்ததோ இல்லையோ, வைகுண்டத்திலிருந்து ஒரு விமானம் வந்தது.

(கனியும்)

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Limited

*சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**நவம்பர் 24 -** மதுரபுரி ஆஸ்ரமத்தில் அறுபத்தி எட்டு நாட்கள் தொடர்ந்து நடந்த, சுந்தரகாண்ட பாராயணத்தின் பூர்த்தியாக ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டு ராமருக்கு பூஜை செய்தார். (அட்டைப்படம் பார்க்க). அன்றே, மதுரபுரி ஸ்ரீஜயஹனுமானுக்கு விசேஷ பூஜை செய்து, வடைமாலை சாற்றப்பட்டது.

**நவம்பர் 26,27 -** குடியாத்தம் ஆஸ்திக சமாஜத்தில் ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசம் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரை கேட்க ஆம்பூரிலிருந்து திரு.மோகன்குமார், திரு.குமரேசன் தலைமையில், எழுபது அன்பர்கள் யாத்திரயாகவே கிராமங்கள் வழியாக வந்தது கண்டு ஸ்ரீஸ்வாமிஜி மிகவும் நெகிழ்ந்தார். அருளுரையை கேட்க மொத்தம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அன்பர்கள் வந்திருந்தனர். அரங்கம் நிரம்பி, தெருவிலும் நின்று அன்பர்கள் அவரது உபன்யாசத்தை கேட்டு பயனுற்றனர். இந்நிகழ்ச்சியை குடியாத்தம் மாணிக்கம் மற்றும் அன்பர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

**டிசம்பர் 7-13 -** டிசம்பர் ஏழாம் தேதி முதல் பதிமூன்றாம் தேதி வரை சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீமத் பாகவத தசமஸ்கந்த பாராயணம் மற்றும் உபன்யாசம் நடைபெற்றது. திருமதி.நர்மதாபத்மநாபன் அவர்கள் க்ருஷ்ண லீலைகளை அழகாக எடுத்து உரைத்தார். அன்பர்கள் அனைவருக்கும் கோமளா பாட்டி அவர்கள் இல்லத்தில் சிறப்பாக ததியாராதனை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல சத்சங்க அன்பர்கள் கலந்து கொண்டு பாராயணம் செய்தனர்.

**டிசம்பர் 13 -** (நவம்பர் 17முதல்) கிருத்திகா மண்டல வேத பாராயணம் சென்னை ப்ரேமிக பவனத்தில் நடைபெற்று வருகிறது. ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஆராதனை தினமான டிசம்பர் 13ம் தேதியன்று

ஸ்ரீசாந்தீபனி குருகுல வேதபாடசாலை சார்பாக, ஸ்ரீஸ்வாமிஜியின் ப்ரேரணையின்படி பல வேதவிற்பன்னர்கள் விமரிசையாக கௌரவிக்கப்பட்டனர்.

**டிசம்பர் 15** அம்பத்தூரில் பாகவத ஸப்தாஹத்தை ஸ்ரீஸ்வாமிஜி துவங்கி வைத்தார். கடும் மழையினையும் பொருட்படுத்தாது சுமார் 400அன்பர்கள் வந்திருந்தனர். இவ்வைபவம் மஹாலக்ஷ்மி கல்யாண மண்டபத்தில் துவங்கியது . ஸ்ரீஸ்வாமிஜி பாகவத மஹாத்மியத்தினை பற்றி அருளுரை வழங்கினார்.

**டிசம்பர் 17-25** - கேரளா திருப்ரையாறு ராமச்சந்திர மூர்த்தி கோவில் மண்டபத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் ஸ்ரீமத்ராமாயண நவாஹம் நடைபெற்றது. தினமும் காலை ஐந்தரை மணியிலிருந்து ராமாயண பாராயணம் பகல் பதினொன்று வரை நடைபெற்றது. மாலை நான்கு மணி



முதல் ஆறு மணி வரை ராமாயண உபன்யாசம் இருந்தது. பின்னர் ஹனுமான் சாலீஸா பாராயணம் செய்யப்பட்டது. ஐந்து நாட்கள் ஸ்ரீஸ்வாமிஜியும் மற்ற நாட்களில் ஸ்ரீபுவன், சௌ.பூர்ணிமாஜி, ஸ்ரீபிரகாஷ் ஆகியோரும் உபன்யாசம் செய்தனர். இரவு தினமும் கீர்த்தனம் நடைபெற்றது. சுமார் 50 அன்பர்கள் கலந்து கொண்டனர். நமது சத்சங்கத்தை சேர்ந்த ஸ்ரீசேதுராமன் மற்றும் ஸ்ரீமதி கீதா சேதுராமன் ஏற்பாடுகளை நன்கு கவனித்து கொண்டனர்.

**டிசம்பர் 19** - பெங்களூரு டவுன்ஹாலில் மாணவர்களுக்கான



மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை நடைபெற்றது. தொடர்ந்து இரண்டாம் வருடமாக இதை பெங்களூரு "GOD **இந்தியா சத்சங்கம்**" நடத்தி வருகிறது. ஸ்ரீபாக்யநாதன் மற்றும் ஸ்ரீகுருமூர்த்தி மாணவர்களை நன்கு ஊக்குவிக்கும் வகையில்



பேசினர். நிகழ்ச்சி மஹாமந்திர கீர்த்தனத்துடன் இனிது நிறைவு பெற்றது. சுமார் ஆயிரத்து இருநூறு மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு மிகவும் பயனுற்றனர். பல மாணவமணிகளுக்கு இந்நிகழ்ச்சி மிகவும் பிடித்திருந்தது என்பதனை அவர்கள் தெரிவித்ததிலிருந்து அறிந்து கொள்ள முடிந்தது. இது குறித்த விரிவான தகவல்களை நாமத்வார் இணையதளத்திலும் பார்க்கலாம். இதே போன்று, சென்னையில், வரும் ஜனவரி 23ம் தேதி மாணவர்களுக்கான கூட்டுப்ப்ரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**டிசம்பர் 22 முதல் 28வரை** - மூன்றாவது வருடமாக சைதன்யமஹாபிரபு நாம பிஷா கேந்திரா சார்பில் நடத்தப்படும் "தெய்வத்தமிழ் இசை விழா" சென்னை மஹோதயா ஹாலில் கோலாஹலமாக துவங்கியது. துவக்க விழாவிற்கு சிறப்பு விருந்தினராக "இசைப்பேரொளி" "சங்கீத கலாசாரதி" நெய்வேலி திரு.சந்தானகோபாலன் வந்திருந்து விழாவை துவக்கிவைத்து உரையாற்றினார். திருவண்ணாமலை பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நிர்வாகி நீதியரசர் திரு.ஜஸ்டிஸ் அருணாசலம் அவர்கள் வருகை தந்து சிறப்புரையாற்றினார்கள். திரு.சந்தானகோபாலன் தமக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் அருள் எப்படியெல்லாம் கிடைத்து வருகிறது என்பது குறித்தும் தமிழ் இசையின் பெருமை குறித்தும் அழகாக பேசினார். வரும் இதழில் இவ்விழா நிகழ்ச்சிகள் பற்றி காண்போம்.

சனாதனப் புதிர் : பகுதி – 10 விடைகள்

–ஆத்ரேயன்



1. தன்னில் சகலத்தையும், சகலத்தில் தன்னையும் காணக்கூடியதே சம்யக் தர்சனம் - கைவல்யோபநிஷத் 1-10- இதை சமாத்ம ஞானம், பிரம்ம ஞானம் என்றும் கூறுவர்.
2. காடகோபநிஷத் - 1-1-27- ந வித்தேன தர்பணீயோ மனுஷ்ய:
3. ஷட் என்றால் 6; ஊர்மி என்றால் அலை; கடலின் அலை போல் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கும் பசி,தாகம், துக்கம், ஆசை, முதுமை, மரணம் - ப்ரஹதாரண்யகோபநிஷத் 3-5-1
4. இந்திரிய போகங்களில் ஈடுபடுபவர்கள் அஸுரர் - "அஸுஷே ரமந்தே இதி அஸுரா:" பிரம்ம ஞானிகளைத்தவிர மற்ற எல்லோரும் அஸுரர்களே. ஈசாவாஸ்யோபநிஷத் -3
5. ப்ரஹ்ம ஜானாதி இதி ப்ராஹ்மண: - ப்ரஹதாரண்யகோபநிஷத் - 3-8-10 - மரணத்திற்கு முன்பு ப்ரம்மத்தை உணர்பவனே உண்மையான ப்ராம்மணன். மற்றபடி எல்லோரும் மனிதர்கள் / நரர்கள்.
6. புருஷான்ன பரம் கிஞ்சித் ஸா காஷ்டா ஸா பரா கதி: காடகோபநிஷத் 1-3-11 "பூர்ணம் அனேன ஸர்வம் இதி புருஷ:" விஸ்வம் முழுவதும் நிறைந்து இருப்பவன் - இந்த ப்ரம்மத்தையே பரம புருஷன் என்று சொல்லுகிறார்கள்.
7. இஷ்டம் - அக்னிஹோத்ரம், தவம், சத்திய வசனம், வேதாத்யயனம், அத்தியாபனம், அதிதி சத்காரம், வைச்வதேவம் - ச்ரௌத கர்மங்கள் - பூர்த்தம் - கிணறு, குளம், ஏரி, தோட்டம், கோயில் கட்டுவது, அன்னதானம் - ஸ்மார்த்த கர்மங்கள் - இஷ்ட பூர்த்தங்களை பெரியதாக நினைத்து, ஆத்மஞானத்தை அறியாதவர்கள் ப்ரமூடர்கள் என்று முண்டகோபநிஷத் 1-2-10 சொல்லுகிறது.
8. விழிப்பு - வைச்வானரன்; கனவு - தைஜஸன்; ஆழ்ந்த நித்திரை - ப்ராஜ்ஞன்; ப்ரகர்ஷேண ஜானாதி இதி ப்ராஜ்ஞ: ப்ரஜ்ஞ ஏவ

ப்ராஜ்ஞ: இதைப் பற்றி ப்ரஹதாரண்யகோபநிஷத்தில் - 4-3-21ல் காணப்படுகிறது.

9. மாக்ருத: கஸ்யஸ்வித்தனம் - ஈசாவாஸ்யோபநிஷத் - பிறர் பொருளை மண்ணாக நினை - பேராசையத் தவிர்.

10. 116 வருடங்கள் - 24வருடங்கள் -காயத்ரி- ப்ராதஸவனம்; 44வருடங்கள் - த்ரிஷ்டுப் - மாத்யந்தினஸவனம்; 48வருடங்கள் - ஜகதீ - ஸாயம்ஸவனம். புருஷனையே யக்ஞம் என்று உபாசிக்க வேண்டும். இதை புருஷ வித்யை என்று கூறுகிறார்கள்.

<u>சனாதனப் புதிர் - பகுதி - 11</u>

(பகுதி 11-ன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

–ஆத்ரேயன்

1. சந்நியாசிகளை எத்தனை வகையாக பிரிக்கலாம்? பரமஹம்ஸர்கள் என்று கருதப்படுபவர்கள் யார்?

2. ப்ரஹதாரண்யகோபநிஷத் 33தேவதைகளைப்பற்றி சொல்லுகிறது -இவர்கள் யார்?

3. எட்டு வசுக்கள் யார்?

4. பதினோரு ருத்திரர்கள் யார்?

5. 12 ஆதித்யர்கள் யார்?

6. "ARISE AWAKE STOP NOT UNTIL THE GOAL IS REACHED" - VIVEKANANDA - இது எந்த உபநிஷத் வாக்கியம்?

7. பரா வித்யை, அபரா வித்யை என்றால் என்ன?

8. ஓம்காரம் மூலம், பிரம்மத்தில் இணையக்கூடிய மார்க்கத்தை எந்த உபநிஷத் தெரிவிக்கிறது?

9. எந்த அறுவர் பகவான் பிப்பலாத மகரிஷியை பரப்பிரம்ம வித்யையை அறிய அணுகினர் ?

10. பரப்பிரம்ம வித்யை உபநிஷத்களில், எந்தப்பெயரில் சொல்லப்படுகிறது?

# பாலகர்களுக்கு ஒரு கதை



## கற்ற முட்டாள்!

திறமை வாய்ந்த ஆசிரியரும், அறிவுள்ள மாணாக்கனும் சேரும்பொழுதுதான், எந்தவொரு கல்வியும் பயன்படும் வகையில் கற்பிக்கப்படும். நல்ல குருவானவர் பக்குவமும், புரிந்து கொள்ளும் தன்மையும் கொண்ட சரியான சீடனுக்கு மட்டும்தான் தனக்கு தெரிந்த வித்தையை கற்று தருவார். இதற்கு பல உதாரணங்கள் உள்ளன. துரோணாச்சாரியார், அஸ்திர வித்தைகளை அர்ஜுனன் போன்ற சிறந்த சீடனுக்குத்தான், பூரணமாக கற்றுக்கொடுக்கிறார். இப்படி சரித்திரத்தில் கூட பார்க்கிறோம். கற்று கொடுத்தவரின் நுணுக்க அறிவுடன், செயல்படுபவரின் சமயோசித புத்தியும் சேர வேண்டும். தவறாக ஒருவருக்கு ஒரு வித்தை பயிற்றுவிக்கப்படின், அது விபரீதத்தில்தான் விடும். அப்படி ஒரு சிறுகதையை பார்ப்போம்.

ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் தொழில்நுட்ப துறைகளில் வல்லவர். அவரிடம் பல மாணாக்கர்கள் பலவித தொழில்களை பயின்று வந்தனர். ஒரு மாணவன் அவரிடம் ரயில் வண்டியை ஓட்டும் விதத்தை கற்று தருமாறு கேட்டான். ஆசிரியருக்கு அது நன்கு தெரியும். பல காலம் ஆசிரியருடன் சென்று பலவித நுணுக்கங்களையும், ரயிலை இயக்கும் விதத்தையும் கற்றான் அந்த மாணவன். ஓரிருமுறை ஆசிரியரின் முன்னால் ரயிலை தனியாகவும் ஓட்டி காட்டினான். அவன் திறமையை மெச்சினார்

கற்று கொடுத்தவரின் நுணுக்க அறிவுடன் செயல்படுபவரின் சமயோசித புத்தியும் சேர வேண்டும். தவறாக ஒருவருக்கு ஒரு வித்தை பயிற்றுவிக்கப்படின் அது விபரீதத்தில்தான் விடும்.



ஆசிரியர். "இனி நீ தனியாக ஓட்டலாம். ஜாக்கிரதையாக ஓட்டுவாய். உன்னை நம்பியே பலர் ரயிலில் வருகின்றனர். ஒரு உயிர் சேதம் கூட நேராதவாறு ஓட்ட வேண்டும். உனக்கு ஏதாவது சந்தேகமிருப்பின் செல்பேசி மூலம் என்னை உடனுக்குடன் தொடர்பு கொள்." என உரைத்து அவனை தனியாக அனுப்ப முடிவு செய்தார்.

சிறிது தூரம் பயணம் செல்ல வேண்டிய ஒரு ரயிலில் டிரைவராக அவனுக்கு முதல் பயணம். பயணிகள் சுமார் ஆயிரம் பேர் இருந்தனர். சரியான சமயத்தில், சரியான விதத்தில் வண்டியை இயக்கினான் அவன். சிக்னல்களில் சரியாக நிறுத்தி

"மாணவமணிகளுக்கான மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை"

GOD இந்தியா டிரஸ்டு சார்பாக X மற்றும் XII மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை சென்னையில் ஜனவரி 23ஆம் தேதி நடைபெறும்.

ஸ்ரீசத்யநாராயணன் தமிழிலும் ஸ்ரீபாக்யநாதன் ஆங்கிலத்திலும் உரையாற்றுவர்.

தேதி - ஜனவரி 23 இடம் : காமராஜர் அரங்கம், தேனாம்பேட்டை

நேரம் - காலை 10 லிருந்து 12வரை

தொடர்புக்கு : 23718351, 9841282419

வெற்றி நிச்சயம்

சென்றான். அவற்றை எல்லாம் ஆசிரியருக்கு செல்பேசி மூலம் தெரியப்படுத்தி வந்தான். ஆசிரியர் மகிழ்வுற்றார். ஒரு முப்பது நிமிட துளிகள் கழித்து, ஆசிரியரின் செல்பேசியில் ஒரு அழைப்பு; டிரைவர்தான் பேசினான் "அய்யா! தண்டவாளத்தில் ஒரு மாடு படுத்திருக்கிறது. உயிரிழப்பு வரலாகாது என்று கூறியுள்ளீர்கள். வண்டி நல்ல வேகத்தில் செல்கிறது. மாடு பிழைக்க வேண்டுமெனில் sudden brake போடுவது அவசியம். போடவா" என்றான்.

ஆசிரியர் பதறினார் "முட்டாள்! பிரேக் போடாதே. அதிவேகத்தில் இப்படி செய்தால் வண்டி தடம் புரளும். பலரும் மரணமடைய வாய்ப்புண்டு. மாடு அடிபட்டு செத்தால் வருத்தம்தான். பல உயிர் பிழைக்க வேண்டுமெனில் ஒருயிரை அதுவும், ஒரு மாட்டை அடிப்பதை தவிர, வேறு வழியில்லை" என்றார். சரி என்றான் அவன் மறுமுனையில்.

மேலும் ஐந்து மணித்துளிகள் சென்றன. மறுபடியும் செல்பேசியில் அழைப்பு. மறுபடியும் அவனே. துக்கமான செய்தியை சொன்னான். வண்டி தடம் புரண்டு விட்டதாகவும் பலர் மரணமடைந்தனர் என்றும் சொன்னான். ஏன் என கேட்ட ஆசிரியர், "நான் சொன்னபடி செய்தாயா?" என சத்தம் போட்டார்.

அவன் சொன்னான் "அய்யா, நீங்கள் சொன்னதைத்தான் செய்தேன்". ஆசிரியர் "மாட்டின் மேல் செலுத்தியிருந்தால் ஒன்றும் ஆகியிருக்காது. பிரேக் போட்டாயா?" என்றார். அவன் சொன்னான், "மாடு அருகில் செல்கையிலே எழுந்து தண்டவாளத்தை விட்டு அகன்றது. மாட்டை அடிக்க நான் முற்பட்டேன். ரயில் கவிழ்ந்தது" என்றான். ஆசிரியர் "உனக்கு கற்று கொடுத்த என் தவறுதான் இது" என தன்னையே கடிந்து கொண்டார்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி



## கர்தா க்ருஷ்ணதாஸ் பாபா - 1

கர்தா க்ருஷ்ணதாஸ் பாபா என்பவர் நித்யானந்தரின் சிஷ்ய பரம்பரையில் வந்த ஒரு மஹானிடமிருந்து தீக்ஷை பெற்றிருந்தார். கோவர்த்தனத்தை சேர்ந்த ஸித்த க்ருஷ்ணதாஸ் பாபாதான் இவரது சிக்ஷா குரு. அஷ்டகால லீலாவில் ஸித்தி அடைந்திருந்ததால், இவர் ஒரு சித்தபாபாவாக கருதப்பட்டார். இவரை 'கர்தா' என்று அழைப்பதன் காரணம், இவரது உயர்ந்த ஆன்மீக நிலையேயாகும். அவர் காலத்தில் இருந்த அனைத்து சாதுக்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் அவரே தலைவராக இருந்தார். அனைவரும் அவரிடமிருந்தே பல சந்தேகங்களை தெளிவுபடுத்தி கொண்டனர். அவரின் அனுமதியின்றி, வைஷ்ணவ சமூஹத்தில் ஒன்றும் செய்ய முடியாது.

கர்தா க்ருஷ்ணதாஸ் பாபா 104வருடங்கள் இருந்தார். தனது வாழ்நாளில் ஒரு விநாடி கூட, வீண் செய்யாமல், ராதா-க்ருஷ்ண சேவையையும், வைஷ்ணவ சேவையையும் செய்து வந்தார் பாபா. இதனால் மதுகரிக்கு செல்வதற்கு கூட, இவரால் முடியாது. மூன்று நான்கு நாட்களுக்கு ஒருமுறைதான் இவர் மதுகரிக்கு செல்வார். வெளியில் எந்த காரியம் செய்தாலும் அகத்தில் அவர் எப்பொழுதும் ராதாக்ருஷ்ண தியானத்திலேயே இருப்பார். சில சமயங்களில், தியானத்தில் ஆழ்ந்து விடும்பொழுது, அவரது அனைத்து வெளி காரியங்களும், அப்படியே நின்று விடும்.

ஒருமுறை, வங்காளத்திலிருந்து ஒரு பாகவதர், பிருந்தாவனத்திலுள்ள ஸாதுக்களுக்கு, தனது பஜனையின் மூலம் சேவை செய்ய ப்ருந்தாவனம் வந்தார். அப்பொழுது அங்குள்ள சாதுக்கள் "தாங்கள் கர்தா பாபாவை கீர்த்தனத்தினால் திருப்தி செய்வீர்களானால், உங்களால் ஏதோ கொஞ்சம் சாது சேவை செய்ய முடிந்தது என்று எண்ணலாம்" என கூறினார்கள். அவரும்

அவ்வாறே கர்தா பாபாவிடம் சென்று, தனது கீர்த்தனத்தை கேட்கும்படி சொன்னார். அப்பொழுதுதான் பாபா ஸ்னானம் செய்திருந்தார். உடம்பில் திலகம் இட்டுக்கொள்ள வேண்டும். அப்பொழுது பாபா அந்த பாடகரிடம் "இப்பொழுது திலகம் இட்டு கொள்வேன். நீ அப்பொழுது பாடலாம்" என்றார்.

அவரும் கீர்த்தனத்தை ஆரம்பித்தார். பாபா தனது கையில் தண்ணீரை எடுத்து ராதாகுண்டத்தின் மணலை திலகமிட்டுக்கொள்வதற்காக குழைக்க ஆரம்பித்தார். கீர்த்தனமானது, ராதா-க்ருஷ்ணரின் ப்ரதம சமாகமத்தை பற்றியதாக இருந்தது. அந்த பாடகர் பாட, பாட, பாபா அந்த பாட்டில் வரும் அனைத்து வர்ணனைகளையும், தன் கண் முன் நடப்பதை கண்டார். இதனால் அவரது புற உலக சிந்தனையை முற்றிலுமிழந்தார். திலகமிட்டு கொள்வதையும் மறந்தார். காலை எட்டு மணிக்கு ஆரம்பித்த கீர்த்தனம், மாலை நான்கு மணி வரை தொடர்ந்தது.

அக்காலத்தில் வரஜத்திலுள்ள சாதுக்கள் தங்கள் சிஷ்யர்களை அஷ்டகால லீலா ஸ்மரணையை பழகுவதற்கு பாபாவிடம் அனுப்புவார்கள். ஆனால், பாபா எல்லோருக்கும் அதில் பயிற்சி அளிக்க மாட்டார். இந்திரியங்களை ஜெயித்தவர்களுக்கும், சாமான்ய ஸ்திதியிலிருந்து உயர்ந்தவர்களுக்கும் மட்டுமே அவர் பயிற்சி அளிப்பார். அதனால், தனது சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளும் முன், ஒவ்வொருவரையும், தனது ஆசிரமத்தில் வைத்துக்கொண்டு அவர்களின் தகுதியை எடைபோடுவார் பாபா.

ஒருமுறை ஒரு சாது, பாபாவிடம் அஷ்ட கால லீலாஸ்மரணையில், தனக்கு பயிற்சி அளிக்குமாறு வேண்டி, பாபாவை அணுகினார். அவரை நன்கு வரவேற்று, ஆஸ்ரமத்தில், அவர் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து தந்தார் பாபா. இரவு, மூன்று நாட்கள் முன்பு தான் பெற்றிருந்த ஒரு காய்ந்த ரொட்டியை, தண்ணீரில் ஊற வைத்து, அந்த சாதுவிற்கு உண்பதற்காக அளித்தார் பாபா. பிறகு பாபா வேறு இடத்தில்

சென்றமர்ந்து. அந்த சாதுவின் நடவடிக்கைகளை கவனிக்கலானார். சாதுவின் முக பாவங்களிலிருந்து இவர் இன்னும் அஷ்ட கால லீலா ஸ்மரணத்திற்கு தகுதியுள்ளவர் அல்ல என்று புரிந்து கொண்டார். அவரிடம் திரும்பி "மன்னிக்க வேண்டும்! என்னுடைய ஆகாரத்தை தெரியாமல் தங்களுக்கு அளித்து விட்டேன்" என்று கூறி அவருக்கு வேறு நல்ல ஆகாரத்தை வழங்கினார். சிறிது நேரம் சென்ற பின் பாபா அந்த சாதுவிடம் "நீ இன்னும் உன் நாக்கிற்கு அடிமையாக உள்ளாய்! உலக சுகங்களில் பற்றிருக்கும் வரை ஒருவன் ராகானுக பக்திக்கு தகுதியற்றவனாகிறான். அதனால் நீ இன்னும் சிறிது காலம் சாதனை பக்தியை பழகு. உலக ஆசைகள் முற்றிலும் அகன்ற பின், என்னிடம் வா!" என்று கூறி அனுப்பி விட்டார். (தொடரும்)



## மாலே மணிவண்ணா – 80

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்



எம்பெருமானது திவ்யகுணங்கள் சொல்ல சொல்ல அளப்பரியன; சொல்லில் அடங்காமல் பெருகிக்கொண்டே போகும். முற்றக்கூறல் என்பது முடியாததாகும்.

*"உணர்ந்து உணர்ந்து இழிந்து அகன்று*
*உயர்ந்து உருவியந்த இந்நிலைமை*
*உணர்ந்து உணர்ந்து உணரிலும்*
*இறைநிலை உணர்வரிது உயிர்காள்"*

என்கிறார் நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2109)

இறைவனை அனுபவிக்கவும் அடிமை செய்யவும் முடியும். அறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் அகப்படாதவன் அவன்.

*எழில் அரங்கம் துயிலும் எம்பிரான் நின்பெருமை*
*யாரே வழுத்துவாரே"* என்பது திருவரங்கக் கலம்பகம்.(32)



எம்பெருமானது பெருமையை விஷ்ணு சகஸ்ர நாமம் ஆயிரம் நாமங்களால் எடுத்து சொல்லவும், அது முற்ற முடியாமல், அளவிறந்து செல்கிறது அன்றோ.

இறைவனையே குருவாக பெற்றவர் மணிவாசகர். அவரே *"பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்"* என்பாராயின் நாம் எம்மாத்திரம்?

திருமுருகாற்று படையுள் இறைவன் முருகனை பல தோத்திரங்களால் பரவிய நக்கீரர் இறுதியில், *"நின் அளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்"* என்றும் *"யான் அறி*



அளவையின் ஏத்தி" என்றும் சொல்லியதையும் இங்கு காணலாம்.

அறுபத்து மூன்று வரிகளால் சர்வக்ஞனான எம்பெருமானை பரவிய பரிபாடல் நான்காம் பாடல், முடிவாக, "நான் சொல்லிய அத்தன்மையை அல்லாத இயல்புகள், எம்பெருமானே! உனக்கு வேறு பலவும் உள: அவ்வியல்புகள் எம்மால் உணர்ந்து உரைக்க இயலாதவை; நின்னை ஒத்த தெய்வ முனிவர்கள் உணரும் உபநிடத பொருளாக உள்ளவை" என்று கூறுவதை காணும்போது,

**"உணர்ந்து உணர்ந்து உணரிலும் இறைநிலை உணர்வதரிது" என்ற நம்மாழ்வாரின் கூற்றையே அவருக்கு ஆயிரம் ஆண்டுகள் முன் எழுந்த பரிபாடலும் விளக்கி நிற்கிறது வியப்பன்றே!**

64. அன்னோர் அல்லா வேறும் உள அவை

65. நின் ஓரன்னோர் அந்தணர் அருமறை

என்கிறது பரிபாடல். (அன்ன அல்லா வேறும் உள = இதுவரை கூறப்பெற்றன அல்லாத இயல்புகள் உனக்கு வேறு பலவும் உள்ளன "அன்ன+ஓர்" என்ப பிரித்து "ஓர்" என்பதை அசையாக்குக என்பர் பரிமேல அழகர். அன்ன அன்பது அன் என்று குறைந்தது என அறிக. நின்+ ஓரன்னோர் அந்தணர் - நின்னை ஒரு தன்மையாக ஒத்திருக்கின்ற தெய்வ

இறைவனையே குருவாக பெற்றவர் மணிவாசகர். அவரே "பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்" என்பாராயின் நாம் எம்மாத்திரம்?

**இறைவனை அனுபவிக்கவும் அடிமை செய்யவும் முடியும். அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் அகப்படாதவன் அவன்.**

முனிவர்களாய உபநிடதத்தை குறித்தது ஆகுபெயர்). நின்னை ஒத்த தெய்வ முனிவர்கள் உணரும் உபநிடத பொருள், எம்மில் உணரத்தக்கனவல்ல என்றார் பரிபாடல் ஆசிரியர். அடுத்து நீயே எல்லாமாக இருக்கிறாய்! எல்லோருமாகவும் இருக்கிறாய் என்று

(தொடரும்)

# சென்னை மேற்கு மாம்பலம் அயோத்தியா மண்டப நிகழ்ச்சிகள்

## வேதபாராயணம், திவ்ய பிரபந்த பாராயணம் மற்றும் உபன்யாசம்

மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, "மஹாரண்யம், ஸ்ரீரங்கம், ஹைதராபாத்" ஆகிய இடங்களில் நடந்து வரும் ஸ்ரீசாந்தீபனி குருகுல வேதபாடசாலையை சார்ந்த வித்யார்த்திகள் வேதபாராயணமும், ஸ்ரீஜெயந்திஜானகிராமன் நினைவு திராவிடவேத ஆகம வைணவ பாடசாலை மாணவர்களின் பிரபந்த பாராயணமும் ஜனவரி மாதம் 25ம் தேதி முதல் 31ம் தேதி வரை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தினமும் மாலை ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசம் நடைபெறும்.

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| *காலை / மதியம் / மாலை* | - | *க்ருஷ்ணயஜுர் வேத ஸம்ஹிதை, ஸாகை, க்ரம பாராயணங்கள் , சாம வேதபாராயணம் திருநாங்கூர் ஸ்ரீஜெயந்திஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம வைணவ பாடசாலை மாணவர்களால்* ***திவ்ய பிரபந்த*** *பாராயணம்* |
| *இரவு 7 - 9PM* | | *"பக்த விஜயம்" உபன்யாசம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி* |

**அக்ஷரமணமாலை** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-165)

பௌதிகமாமுடல் பற்றற்று நாளுமுன் பவிசு
கண்டுறவருள் அருணாசலா

உடல் பற்று ஒழிந்தால் மட்டுமே ஆன்ம சாக்ஷாத்காரம் என்பது கைகூடும். உடல் பற்று அழியாமல் ஆன்ம சாக்ஷாத்காரம் கைகூடுவது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

மஹான்கள் தங்களது வாழ்வில் "உடல் வேறு ஆன்மா வேறு" என்பதை அனுபவத்திலும் காட்டி உள்ளனர். ஆதிசங்கரரை காபாலிகர்கள் அணுகி, அவரது உடலை பலியாக கேட்டனர். அவர், "உடலினால் பிரயோஜனம் யாதுமில்லை என இருந்தேன். இப்படி ஒரு உபயோகம் உண்டெனில் பலி கொள்" என்று கூறினார். அவரை நரசிம்ம பகவான் காப்பாற்றினார். அப்பொழுது கூட சங்கரர் "லக்ஷ்மிநரசிம்மா! ஏன் என்னை காப்பாற்றினாய்! இதை ஒரு சாக்காய் கொண்டு உடலை உதற எண்ணியிருந்தேன்" என்கிறார். உடல் பற்றிருப்பின் இப்படி சொல்ல இயலுமோ? சதாசிவ ப்ரும்மேந்திரர் எனும் மஹாத்மா இருந்தார். அவர் ஒரு அவதூதர். அவர் அப்படி ஒரு தெரு வழியாக செல்ல, கோபம் கொண்டு அவரது ஒரு கையை ஒரு மன்னன் வெட்டி விட்டான். அவரோ லட்சியம் செய்யாது சென்றார். ஏனெனில் அவருக்கு கை வெட்டியதே தெரியவில்லை! மன்னன் மன்னிப்பு கேட்டு விண்ணப்பிக்க, பின்னர் அவர் தன் கையை தடவி விட, அது மறுபடி வந்ததாய் இருக்கிறது. ஆலங்குடி பெரியவர்கள் என்றொரு மஹாத்மா இருந்தார். பாகவதம் கேட்பதாக ஒப்புக்கொண்டால் மட்டுமே, எந்தவொரு ஊருக்கும் வருவார். அவர் கஜேந்திர முக்தி உபன்யாசம் ஓரிடத்தில் சொன்னார். மறுநாள் அவர் குளிக்கும் குளத்தில், ஒரு துஷ்டன், ஒரு நிஜ முதலையை போட்டு அவரை சோதித்தான். முதலை கவ்வுகையில் அவர் கஜேந்திர ஸ்துதி சொல்ல, முதலை அதிசயமாய் துண்டாகி விடுகிறது. பயந்து போன துஷ்டன் அவரிடம் மன்னிப்பு கேட்கிறான். அவரோ "நான் நேற்று உடல் வேறு ஆன்மா வேறு என்றும் உபதேசித்தேன். காய்ச்சிய எண்ணையை கொண்டு வா" என ஆணையிட்டு முதலை கடித்த இடத்தில் ஊற்றி கொண்டார். நம்முடைய ரமண மஹரிஷிகள் பாதாள குகையில் தவத்தில் இருந்தபொழுது, அவரது உடலை பூரான், பூச்சி, புழுக்கள் துளைக்க அவரேதுமறியாமல்தானே இருந்தார்? அவர் உடல் நினைவு அற்றவராக இருந்தார் என்பதற்கு இதுவே பெரும் சான்று. ஞானிகள் மட்டுமல்ல,

பக்தர்களும் அப்படித்தான். கண்ணப்ப நாயனார் தனது கண்ணையே இறைவனுக்காக பிடுங்கவில்லையா?. ஆக உடல் பற்று ஒழிவது முக்கியம். சாதனை காலத்திலேயே இதை சிந்தனையில் வைப்பது அவசியம். உடல் சத்தியம் என நினைத்தால் மாயை விலகுவது அசாத்தியம். மாயைப்பற்று விலக இறைவனின் அருளே முக்கியமானது. உள்ளத்தில் உள்ள இறைவன், தன் மேல் பற்றை கூட்டினால்தான் (பவிக கொண்டுறவருள்) இது சாத்தியம். அத்தகைய அருளை செய்ய அருணாசலேஸ்வரனை பிரார்த்திக்கிறார் ரமண மஹரிஷிகள்.

(தொடரும்)

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| ஜனவரி 11, 26 | ஏகாதசி |
| ஜனவரி 1 | சென்னை குரோம்பேட்டை விவேகானந்தா பள்ளி Magic Spell of Mahamanthra - கூட்டுப்பிரார்த்தனை 6PM |
| ஜனவரி 3-11 | அத்யயன உத்ஸவம் - மதுரபுரி ஆஸ்ரமம் |
| ஜனவரி 11 | அம்பத்தூர் - பாகவத மேளா |
| ஜனவரி 12-18 | சென்னை நாரத கான சபா - பாகவதம் உபன்யாசம் |
| ஜனவரி 20 | மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாசபெருமாள் கோவில் - பிரதிஷ்டா தினம் |
| ஜனவரி 25-31 | அயோத்தியா மண்டபம், மாம்பலம் காலை/மதியம்/மாலை - வேதபாராயணம், பிரபந்த பாராயணம். இரவு - ஸ்ரீஸ்வாமிஜியின் பக்த விஜயம் உபன்யாசம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.